மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு ஆண்டும் கடன் உதவி வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 1994-95-ல் 89 நபர்களுக்கு கடன் உதவி வழங்கப்பட்டது.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் கறவை மாடுகள் வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களது அரசிலே சிறப்பான முறையிலே வழங்கி வந்தாலும், இந்த ஆண்டும் தொடர்ந்து வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு போளூரிலே வேளாண்மை செய்யும் மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தாலும், போளூர் வட்டத்தில் அதிகமாக பால் உற்பத்தி இருப்பதாலும் கூடுதலாக இந்த மாடுகளை வழங்குவதற்கும், குறிப்பாக மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகமாக கறவை மாடுகள் வழங்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கருத்துக்கள் அத்தனையும் நிறைவேற்றப்படும்.

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு தமிழ்நாட்டிலே எனது போளூர் வட்டத்திற்கு அதிகமான மாடுகள் வழங்குவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 473. திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

473—

தனியார் மருத்துவமனையில் அதிக கட்டணம் வசூலித்தல்

***35149**—திரு. ஏ.கே.சி.சுந்தரவேல்:*

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தனியார் மருத்துவமனைகளில் குளிர் சாதனம் பொருத்தப்பட்டு மிக அதிகமான கட்டணம்/வாடகை வசூலிக்கப்பட்டு வருவதை அரசு அறியுமா?

1995 ஏப்ரல் 27]

(ஆ) ஆம் எனில், மிக அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகைக்கு சொகுசு வரி விதிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தனியார் மருத்துவ மனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு மிக அதிகமாகக் கட்டணம் வசூலிப்பதை, வாடகை வசூலிப்பதை அரசு அறியும்.

(ஆ) 1981-ஆம் வருடம் தமிழ்நாடு ஹோட்டல் மற்றும் விடுதிகள் சொகுசு வரிச் சட்டப்படி சொகுசு வரியாக ஹோட்டல் மற்றும் தங்கும் விடுதிகளில் தங்குபவர்களிடமிருந்து வரி வசூல் செய்யப்படுகிறது. மருத்துவ மனைகள் இதில் அடங்காது.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சி தலைவி ஆட்சி பொறுப்பேற்ற இந்த 4 ஆண்டு காலத்திலே எந்த முதலமைச்சரும் சாதிக்க முடியாத மகத்தான சாதனைகளைப் படைத்து வரும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், நட்சத்திர ஓட்டல்களைக் காட்டிலும் தமிழகத்தில் சில மருத்துவ மனைகளில் நோயாளிகளிடம் அதிகமாக வாடகை வசூல் செய்யப்படுகிறது. அப்படி வசூலிக்கப்படும் வாடகைக் கட்டணத்திற்கு ஆடம்பர வரி விதிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நட்சத்திர ஹோட்டல்களைக் காட்டிலும் தனியார் மருத்துவமனைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் அதிகமாக வாடகை வசூலிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். இது ஓரளவு உண்மையும்கூட. அதே நேரத்தில் வளர்ந்து வரும் தமிழகத்தில் சிகிச்சை பெறுவதற்காக பல்வேறு மாநிலங்கள், பிற நாடுகளிலிருந்துகூட வந்து சிகிச்சை பெற்று சென்று கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் நல்ல ஆரோக்கியமான நிலையில் மருத்துவமனைகள் பராமரிக்கப்படுவதை அரசு ஊக்குவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் அந்த மருத்துவமனைகள் சேவை நோக்கை விட்டுவிட்டு வருமானத்தை மட்டும் கருத்தில் கொண்டு செயல்படுமானால் அது கண்காணிக்கப்படக்கூடிய ஒன்று. ஆனால் இப்போதைக்கு சட்டத்தில் வரி வசூல் செய்வதற்கு இடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர் அல்லாதவர்களும் கட்டிடங்களைக் கட்டி வைத்துக் கொண்டு வாடகைக்கு விடுகிறார்கள். தனியார் மருத்துவமனைகள் சில வியாபார ஸ்தலமாகவே செயல்படுவதை வணிகவரித் துறை கவனத்தில் கொண்டுள்ளதா? அதிகம் வாடகை வசூல் செய்யப்படுவதை கட்டுப்படுத்தும் வகையில் வரி விதிக்கும் முறையை ஏற்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய கவனத்தில் இல்லாமல் எதுவுமே தமிழகத்தில் நடந்துவிடுவது இல்லை. நான் ஏற்கனவே சொன்னபிரகாரம் மருத்துவமனைகள பல வசதிகளை உட்படுத்தி, பல நவீன நுட்பங்களைப் பயன்படுத்தி உலகளவில் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்ற சாதனைகள் இங்கே சிகிச்சைக்குப் பயன்படுத்தி வரப்படுகிறது. அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று தனவந்தர்கள், அவர்கள் மருத்துவர்கள் இல்லை என்றாலும்கூட இதனை வருமானம் ஈட்டும் ஒரு தொழிலாக இன்றையதினம் பல்வேறு தனியார் மருத்துவமனைகளைக் கட்டி மருத்துவர்களுக்குத் தனியாகக் கட்டணம் வசூல் செய்கின்றார்கள். மருந்துக்குத் தனியாக வசூல் செய்கிறார்கள். அவர்களுடைய மற்ற சேவைகளுக்கு தனியாக வசூல் செய்கின்றார்கள். அறுவை சிகிச்சை செய்வதற்கு அங்கே தனி அரங்கம் இருக்குமானால் அதற்கு தனியாக வசூல் செய்கின்றார்கள். இதுபோக அங்கே தங்க வைக்கின்ற நோயாளிகளிடமிருந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று நட்சத்திர ஹோட்டல்களில் வசூல் செய்வதைக் காட்டிலும் பன்மடங்கு கூடுதலாக வசூல் செய்யப்படுவது கவனத்தில் கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் நோயாளிகள் பாதிக்கப்படாமல் நோயாளிகள் வரி கட்டக் கூடாத வகையில் அதே நேரத்தில் அந்த கட்டிடத்தை பராமரிப்பவர்கள் அபரிமிதமான லாபத்தைப் பெறுவார்களானால் ஒரு குறிப்பிட்ட கட்டணம்தான் வாடகையாக நிர்ணயிக்கப்படவேண்டும் என்று நடைமுறைப்படுத்தலாம். வணிக வரித் துறை மட்டும் அப்படிப்பட்ட ஒரு கட்டுப்பாடு கொண்டுவர முடியாது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடன் கலந்து பேசி தனியார் மருத்துமனைகளில் மிகக் கூடுதலாக வாடகை வசூல் செய்யப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க முன்வரலாம். அப்படி இல்லை என்று சொன்னால் குறிப்பிட்ட கட்டணத்திற்கு மேல் அவர்கள் விதிப்பார்களேயானால் அதற்கு சொகுசு வரி விதிப்பதற்கு ஆலோசிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 474, திரு.என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.